# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),
************

மனு எண்: 435/2017/ஊராட்சி

ஆணை எண்: 091 /2017

நாள்: 3/05/2017

ஊர் பொது மக்கள்,
தேவிகாபுரம் கிராமம்,
திருவண்ணாமலை மாவட்டம். - மனுதாரர்கள்

வட்டார வளர்ச்சி அலுவலர்,
மேற்கு ஆரணி,
ஊராட்சி ஒன்றியம்,
திருவண்ணாமலை மாவட்டம். - எதிர் மனுதாரர்

## ஆணை

திருவண்ணாமலை மாவட்டம், மேற்கு ஆரணி ஊராட்சி ஒன்றியம், தேவிகாபுரம் ஊராட்சி, ஊர் பொது மக்கள் சார்பாக பெறப்பட்ட நாளிடப்படாத மனுவில் தேவிகாபுரம் முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர் ராதா ஜெயபாலன் என்பவரின் மூத்த மகன் திரு. வெங்கடேசன் (எ) கொலைகார வெங்கடேசன் என்பவர், பஞ்சாயத்துக்கு சொந்தமான அல்லிக்குட்டையின் கீழ்புறம் கொளக்கரவாடிமலை அடிவாரத்திலுள்ள 15 ஏக்கர் இடத்தை ஜே.சி.பி. மூலம் சமன் செய்து 4 ஏரி நீர்வரத்து கால்வாயில் அடைப்பை ஏற்படுத்தி ஆக்கிரமிப்பு செய்து தடுப்பு சுவர் போட்டுள்ளார் என்றும், அரசு ஆணைப்படி மதுக்கடைகள் மதியம் 12 மணி முதல் திறக்கப்பட வேண்டும் என்றும், ஆனால் திரு. வெங்கடேசன் காலை 6 மணி முதல் 12 மணி வரை அவருடைய சொகுசு பங்களாவில் மதுபானங்கள் அதிக விலையில் விற்கப்படுகின்றன என்றும், அந்த பங்களா நீர்வரத்து கால்வாய் மீது கட்டப்பட்டுள்ளது என்றும், அதற்கு மின்சாரம் திருட்டுத்தனமாக எடுக்கப்படுகிறது

என்றும், இச்செயல்களை எந்த அதிகாரிகளும் கண்டு கொள்வதில்லை எனத் தெரிவித்து, திரு. வெங்கடேசன் மீது தக்க நடவடிக்கை எடுத்து, ஊர் மக்களை காப்பாற்றுமாறு கோரியுள்ளார்கள்.

2. 2014-ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 2, உட்பிரிவு (7)ன்படி "உள்ளாட்சி அமைப்பு" என்பதற்கான பொருளில் "ஊராட்சி மன்றம்" மற்றும் "ஊராட்சி ஒன்றியம்" என்ற அமைப்புகள் வரையறுக்கப்படவில்லை. எனவே மனுதாரர் மனு மீது இம்முறைமன்ற நடுவத்தால் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ள இயலாது. எனவே இம்மனுவினை மாவட்ட ஆட்சித் தலைவர், திருவண்ணாமலை மாவட்டம் அவர்களுக்கு தக்க நடவடிக்கைக்காக மேலனுப்ப முடிவு செய்யப்பட்டு, அவ்வாறே அனுப்பப்படுகிறது. மேலும் இப்பொருள் குறித்து திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களை அணுகுமாறு மனுதாரர்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது.

2017-ஆம் ஆண்டு மே திங்கள் 4-ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--
**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்**

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

5/5/17

செயலாளர்.

5517 5/5/17

**பெறுநர்**
திரு. V.H.D. வெங்கடேசன்,
(ஊர் பொது மக்கள் சார்பாக)
தேவிகாபுரம் கிராமம்,
சேத்துப்பட்டு வட்டம்,
திருவண்ணாமலை மாவட்டம்.

**நகல்**
மாவட்ட ஆட்சித் தலைவர்,
திருவண்ணாமலை மாவட்டம்,
திருவண்ணாமலை.